நாள் - 26.02.2019

## சார்பு நீதிமன்றம் திருச்செங்கோடு

## EA.189/17 In EP 36-13

ம.சா. 2 ( மல்லிகா ) குறுக்குவிசாரணை

எனது தகப்பனார் இறந்த வருடம் தேதி மாதம் தெரியாது. சுமார் 10 வருடம் இருக்கும். என்னுடன் பிறந்தவர்கள் ஒரு தம்பி மட்டும். அவர் இவ்வழக்கின் 2ம் எதிர்மனுதாரர் ஆவார். எனக்கு திருமணம் நடந்து 30 வருடம் இருக்கும். 1985 ல் இருக்கலாம் என நினைக்கிறேன். என்னை திருமணம் செய்து கொடுத்தது உள்ளூரிலேயே. எனது வீட்டின் முகவரி எனக்கு நினைவில்லை. எனது தகப்பனார் உயிருடன் இருந்தபோதுதான் திருமணம் செய்து வைத்தார். எனக்கும் எனது சகோதரர் ராஜவேலுக்கும் எந்த மனக்கசப்பும் கிடையாது. அவர் என்ன தொழில் செய்கிறார் என்று தெரியாது. அவருக்கு உதவி தேவைப்படும்போது செய்வேன். திருமணம் நடந்தது முதல் பாதரை என்ற ஊரில் வசிக்கிறேன். இன்றுவரையிலும் அந்த முகவரியில்தான் வசிக்கிறேன். கடந்த 4 , 5 வருடமாக எனது தாயாரின் முகவரியில்தான் வசிக்கிறேன். 4,5 வருடமாக தாயாருடன்தான் வசிக்கிறேன். சுமார் 2 வருடம் முன்புதான் வழக்குப்பற்றி தெரியவந்தது. நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு வந்ததும் தண்டூரா மூலம் அறிவிப்பு செய்யப்பட்டது எனக்கு தெரியாது. எங்கள் பூர்விக சொத்தில் எனக்கு உண்டான பாகத்தில் தாக்கல் செய்துள்ளேன். பாகம் கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. திருச்செங்கோட்டில் உள்ள வழக்கிறஞர் முனிராஜ் ஐ வழக்கறிஞர் அலுவலகத்தில் சென்று பார்த்தேன். நாமக்கல்லில் எந்த வழக்கறிஞரையும் சந்திக்கவில்லை. எனக்கு எழுதப்படிக்க தெரியும். நாமக்கல் வழக்கறிஞா முன்னிலையில் நானும் எனது தாயாரும் நிரூபன வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தோமா என்றால் நாமக்கல்லில் கையொப்பம் செய்யவில்லை. திருச்செங்கோட்டில்தான் கையொப்பம் செய்தேன். எனது தாயார் சாட்சியம் அளித்தபோது நான் வரவில்லை. 2 வருடத்திற்கு முன்பு நோட்டீஸ் கிடைக்கப்பெற்றவுடன் வழக்கறிஞரைப் பார்த்து இம்மனுவை தாக்கல் செய்தேன். இம்மனுவானது 17.09.2016ல் தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் 23.02.2017ல் தாக்கல்

செய்யப்பட்டதற்கான காரணம் கணவர் இறந்ததால் கால தாமதம் ஏற்பட்டது. நான் இம்மனுவிற்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் தவறு. இம்மனுவில் 1ம் எதிர்மனுதாரின் பதில் விபரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொள்ளவில்லை. பதிலுரை விபரம் தெரியாமல் நிரூபன வாக்குமூலம் தாக்கல் செய்தேன். ராஜவேலு இதற்கு முன்னால் கடன் ஏதும் பெற்றுள்ளாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. சொத்து ராஜவேலுக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியம் என்பதால்தான் 2004ம் வருடமே தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகத்தில் மேற்படி சொத்தை காட்டி கடன் பெற்று அதனை திருப்புயும் செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான்கூறுவதுபோல் எனக்கும் எனது தாயாருக்கும் பாகம் இருக்கும் பட்சம் தமிழ்நாட்டு தொழீல் முதலீட்டுக்கழகத்தில் கடன்பெற்றபோது என்னிடமும் எனது தாயாரிடமும் கையொப்பம் பெற்றிருப்பார்கள் என்றால் சரியல்ல. தற்போது சுந்தரராஜனிடம் பெற்ற கடனை ஏமாற்றும் பொருட்டு என்மூலமாகவும் எனது தாயாருடனும் ராஜவேலு அனைத்து நீதிமன்ற நடவடிக்கையும் முடிவுற்றபின்னா் சொத்து ஏலத்திற்கு வரும்போது இம்மனுவை தாக்கல் செய்துள்ளாா் என்றால் தவறு. எனக்கும் எனது தாயாருக்கும் இம்மனு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்பது தெரியாது என்றும் எனது சகோதரருக்கு உதவி செய்ய தாக்கல் செய்யப்பட்டது என்றால் தவறு. மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் தவறு.

Sd/-மல்லிகா

Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct.

Sd/- M.Balakumar,
Subordinate Judge,
Tiruchengode.